அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 19/90

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு 7.
1990, மார்ச்சு 16ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்கள், அரசாங்கஅதிபர்களுக்கும்,
உள்ளூராட்சி/பிரதேச சபைகளின் ஆணையாளர்களுக்கும்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும்,
உள்ளூராட்சி மன்றச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும்,
கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

## உத்தியோக பூர்வ தொலைபேசி பாவனை

உத்தியோக பூர்வ தொலைபேசிகளை பெற்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து, அதற்கான தொலைபேசி கட்டணங்களில் 10%த்தை அறவிட்டுக் கொள்ளவும், இவ் எல்லையை மீறி தமது சொந்த தேவைகளின் பொருட்டு தொலைபேசியை பாவிக்கும் உத்தியோகத்தர்களால் பயபக்தியுடன் செய்து கொள்ளும் உறுதிக்கிணங்க மேலதிக சொந்த தொலைபேசி பாவனையின் பொருட்டு பணம் அறவிட்டுக் கொள்ளவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இத்தீர்மானத்தை 1990.01.01ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

03. இச்சுற்று நிருபத்தில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளை உங்கள் நிறுவனத்தில் உத்தியோக பூர்வ தொலைபேசி வசதிகளை பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கவும்.

ஒப்பம்.
விமல் அமரசேகர
தாபனப் பணிப்பாளர்

ஒப்பம்: பி. என். எம். பெர்ணந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.